வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu — ඊළනාඩු

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 07 | 03.03.2026 செவ்வாய்க்கிழமை | இதழ் : 57 | பக்கங்கள் : 08




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும்
இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிறாம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

## பிற நாடுகளில் ஆட்சி மாற்றத்துக்கு

# ட்ரம்ப் எடுக்கும் நடவடிக்கைகள் எவ்வகையிலும் ஏற்கமுடியாதவை!

### முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சாடல்



கொழும்பு, மார்ச் 03

பிற நாடுகளின் ஆட்சி அதிகாரத்தை வலுக்கட்டாயமாக மாற்ற ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எடுக்கும் நடவடிக்கைகள் எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாதவை என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஈரானுக்கு எதிராக அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் முன்னெடுக்கும் தாக்குதல்கள் குறித்து நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி ட்ரம்ப் இஸ்ரேலுடன் இணைந்து ஈரானின் தலைமையை அகற்ற முயற்சிக்கிறார்.

ஒரு அரசாங்கத்தை அகற்றுவதாக இருந்தால் இந்த வன்முறை வழிமுறையை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.


இது சர்வதேச சட்டங்கள் மற்றும் மரபுகளுக்கு முரணானது என சுவிற்சர்லாந்தும் நோர்வேயும் சுட்டிக்காட்டியுள்ளன.

இந்த விவகாரம் மிகவும் பாரதூரமானது என்றும்,

07

# அமெரிக்காவுடன் பேச்சு கிடையாது!

### ஈரான் திட்டவட்டம்



தெஹ்ரான், மார்ச் 03

“அமெரிக்காவுடன் ஈரான் பேச்சு நடத்தாது. தன்னை தானே தற்காத்துக்கொள்ளும் உரிமை ஈரானுக்கு உள்ளது.” என்று அந்நாட்டின் தேசிய பாதுகாப்பு சபையின் தலைவர் அலி லாரிஜானி தெரிவித்துள்ளார்.


தனது அதிகாரபூர்வ எக்ஸ்தள பக்கம் ஊடாகவே அவர் மேற்படி அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

“டொனால்ட் ட்ரம்ப் தனது தவறான

07

# மத்திய கிழக்குப் போரை முடிவுக்கு கொண்டு வருக!

### அனைத்து தரப்புகளிடமும் இலங்கை அரசு கோரிக்கை



கொழும்பு, மார்ச் 03

மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள போரை முடிவுக்கு கொண்டுவருமாறு அனைத்து தரப்புகளிடமும் இலங்கை கோரிக்கை விடுக்கின்றது என்று அமைச்சரவைப் பேச்சாளரும்,

07

# மாகாண தேர்தலுக்கு தயாராகுமாறு ரணிலிடம் கூறினார் இந்திய தூதுவர்

கொழும்பு, மார்ச் 03

மாகாண சபைத் தேர்தலுக்குத் தயாராகுமாறு இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்துள்ளார் என சிங்கள ஊடகம் ஒன்று தனது பத்தியில் குறிப்பிட்டுள்ளது.

இதற்கு பதிலளித்த முன்னாள் ஜனாதிபதி ரணில், “நாங்கள் தயாராக இருக்கிறோம்” என்று கூறியதாக அதில் கூறப்பட்டுள்ளது.

அண்மையில் இந்தியத் தூதுவரும் முன்னாள் ஜனாதிபதியும் மல்பாராவில் உள்ள அவரது அலுவலகத்தில் சந்தித்தனர். இந்த சந்திப்பில் முன்னாள் ஜனாதிபதி ரணில் மற்றும் இந்தியத் தூதுவர் மட்டுமே பங்கேற்றதாக கூறப்படுகிறது.

இருப்பினும், முன்னாள் ஜனாதிபதியைச் சந்திக்க சந்தோஷ் ஜா மல்பாராவுக்கு வந்தபோது, முன்னாள் ஜனாதிபதி எதிர்க்கட்சி பிரதிநிதிகள் குழுவுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தார் எனவும், தூதுவர் கலந்துரையாடல் முடியும் வரை சுமார் பத்து நிமிடங்கள் உத்தியோகபூர்வ வாகனத்திலேயே இருந்தார் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இந்தியாவால் தொடங்கப்பட்ட திட்டங்களின் முன்னேற்றம் குறித்தும் அவர்கள் விவாதித்தனர் எனக் கூறப்படுகிறது.

இந்திய தூதரகத்தை சேர்ந்த ஒரு அதிகாரி வந்து அந்த சந்திப்பின் புகைப்படத்தை எடுத்தார், பின்னர் அது ஊடகங்களுடன் பகிரப்பட்டது. (அ)

# அவசரகால நிலை நீடிப்பு

கொழும்பு, மார்ச் 03

இலங்கையில் பொதுமக்கள் அவசரகால நிலையை நீடித்து ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, இந்த அவசரகால நிலைமை பெப்ரவரி மாதம் 28ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் என அந்த அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு பிரித்தானியாவில் புதிய கட்டுப்பாடு

### அகதி அந்தஸ்து இனி தற்காலிகமானது

லண்டன், மார்ச் 03


பிரித்தானியாவின் ஏதிலிகள் புகலிடக் கோரிக்கை முறையில் ஒரு தலைமுறையில் காணப்படாத மிகப் பெரிய மாற்றத்தை உள்துறைச் செயலர் ஷபானா மஹ்மூத் நேற்று முதல் அமுல்படுத்தியுள்ளார்.

இதன் மூலம் பிரித்தானியாவில் ஏதிலி அந்தஸ்து பெறுபவர்களுக்கு வழங்கப்படும் பாதுகாப்பு இனி நிரந்தரமானது அல்ல என்பது உறுதி செய்யப் பட்டுள்ளது.

07

# பயங்கரவாத தடை சட்டத்தை அரசு முற்றாக நீக்கவேண்டும்!

### மன்னார் ஆயர் கோரிக்கை



மன்னார், மார்ச் 03

பயங்கரவாத தடைச்சட்டத்தை முற்றாக நீக்குவதில் அரசு மிகுந்த கவனம் செலுத்தவேண்டும் என மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

இதற்குப் பதிலாக வேறு சட்டங்களை முன் மொழியாது, மக்களின் உணர்வுகளைப் புரிந்து மக்களோடு பயணிக்க அரசு தயாராக இருக்க வே்ண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

மறைமாவட்ட மக்களுக்கு எழுதிய தவக்கால திருமடலில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இந்த

07

# இஸ்ரேல் பிரதமர் அலுவலகம் மீது ஈரான் தாக்குதல்!

தெஹ்ரான், மார்ச் 03

ஈரான் - இஸ்ரேல் மோதல் தொடரும் நிலையில், இஸ்ரேலின் டெல் அவிவ் நகரில் உள்ள, பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகுவின் அலுவலகம் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக, ஈரானின்

07

# காங்கேசன்-நாகப்பட்டினம் இடையே 6ஆம் திகதி தொடக்கம் கப்பல் சேவை!

யாழ்ப்பாணம், மார்ச் 03

காங்கேசன்துறைக்கும் நாகபட்டினத்துக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை எதிர்வரும் 06 ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக சுபம் கப்பல் நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் ஜெயசீலன் தெரிவித்துள்ளார்.

குறித்த கப்பல் சேவை அசாதாரண காலநிலை காரணமாக இடைநிறுத்தப்பட்டது. இந்நிலையில் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

07

# எரிபொருள் கையிருப்பு; வீண் அச்சம் வேண்டாம்!

கொழும்பு, மார்ச் 03

நாட்டில் போதுமானளவுக்கு எரிபொருள் கையிருப்பில் உள்ளது. எனவே, எரிபொருள் தட்டுப்பாடு தொடர்பில் வீண் அச்சம் கொள்ளவேண்டாம் என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

“நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் என்ற வீண் அச்சத்தால் மக்கள் எரிபொருள் சேகரிப்பில் ஈடுபட்டுவருகின்றனர். அவ்வாறு அச்சம் கொள்ளத் தேவை இல்லை.

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் வரிசை தொடர்ந்தால் மீளவும் கியூ.ஆர். குறியீடு அறிமுகம்

## அரசாங்கம் எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 03

அச்சம் காரணமாக எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பொதுமக்கள் வரிசையில் நின்று எரிபொருள் வாங்கும் செயற்பாடு தொடர்ந்தால் மீளவும் கியூ.ஆர். குறியீடு அறிமுகப்படுத்த கட்டாயம் ஏற்படும் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

எரிசக்தி பிரதி அமைச்சர் அக்ரம் இலியாஸ் இதனை தெரிவித்துள்ளார்.

கடந்த இரண்டு நாட்களாக நாடு முழுவதும் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து எரிபொருள் பெற்று வருகின்றனர்.

இதனால் செயற்கையாக எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும், இந்த நிலை நீடித்தால் மீளவும் கியூ.ஆர். குறியீடு அறிமுகப்படுத்த கட்டாயம் ஏற்படும் என அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை தனது எரிபொருளை முதன்மையாக மத்திய கிழக்கு பிராந்தியங்களிலிருந்து அல்லாமல் சிங்கப்பூர், இந்தியா, மலேசியா மற்றும் தென் கொரியா போன்ற நாடுகளிலிருந்து பெறுகிறது என்று அமைச்சர் விளக்கியுள்ளார்.

தொடர்ந்து பீதியுடன் எரிபொருட்களை வாங்குவது பவுசர், லொறிகள் மூலம் மேற்கொள்ளப்படும் விநியோக செயல்முறையை சீர்குலைக்கும் என்று அவர் வலியுறுத்தினார்.

மேலும் சீரான விநியோகத்தை உறுதி செய்ய அரசாங்கத்திற்கு ஒத்துழைக்குமாறு பொதுமக்களிடம் அமைச்சர் கோரிக்கை விடுத்துள்ளார். (அ)



பிரதம நீதியரசர் பிரித்தி பத்மன் சூரசேன மல்லாகம் நீதிமன்றத்துக்கு நேற்று முன் தினம் விஜயம் மேற்கொண்டார்.

நீதிமன்றம் அமைவிடம், கட்டிடத் தொகுதிகள், வசதி வாய்ப்புகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் பார்வையிட்டு அது தொடர்பாக நீதிபதிகளுடன் ஆராய்ந்தார். (அ)

# மத்திய கிழக்கு நெருக்கடி; அரசின் விசேட நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 03

மத்திய கிழக்கு மற்றும் வளைகுடா பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள அமைதியற்ற சூழ்நிலைக்கு மத்தியில், இலங்கையிலுள்ள வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பு மற்றும் நலன்புரி விடயங்களை ஆராய்வதற்கும், வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தொழிலாளர்களின் பாதுகாப்பு மற்றும் நலன்புரி தேவைகளை கவனிப்பதற்கும் அரசாங்கம் விசேட நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

ஜனாதிபதி அலுவலகத்தில் சுற்றுலாத்துறை பிரதி அமைச்சர் ருவன் ரணசிங்க மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க ஆகியோரின் தலைமையில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலின் போதே இந்த தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

தற்போது நாட்டில் தங்கியிருக்கும் சுற்றுலாப் பயணிகள் எதிர்நோக்கும் நடைமுறைச் சிக்கல்களைக் கருத்திற்கொண்டு, அவர்களது விஸா காலத்தை எவ்வித கட்டணமுமின்றி இரண்டு வாரங்களுக்கு நீடிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

தேவைப்படின் இதனை மேலும் நீடிப்பது குறித்து பரிசீலிக்கப்படும்.

நாட்டில் தங்கியுள்ள சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான வசதிகளை வழங்கவும், அவர்களின் பாதுகாப்பு மற்றும் நலன்புரி விடயங்களை ஆராயவும் வெளிவிவகார அமைச்சின் ஊடாக அந்தந்த தூதரகங்களுடன் கலந்துரையாடி முறையான வேலைத்திட்டமொன்றை உடனடியாகத் தயாரிப்பதற்கும் இங்கு தீர்மானிக்கப்பட்டது.

சில மத்திய கிழக்கு நாடுகளின் வான்பரப்பு மூடப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள தடைகளை கருத்திற்கொண்டு, வெளிவிவகார அமைச்சு மற்றும் விமான நிறுவனங்கள் இணைந்து மாற்று வான்வழிகள் ஊடாக சுற்றுலாப் பயணிகள் தமது நாடுகளுக்குத் திரும்புவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராயவும் தீர்மானிக்கப்பட்டது. (அ)

# இலங்கை தேயிலை ஏற்றுமதிக்கு ஆபத்து!

கொழும்பு, மார்ச் 03

மத்திய கிழக்கு நாடுகளில் நிலவும் பதற்ற நிலை தொடருமாயின் இலங்கை ஏற்றுமதித்துறையில் நெருக்கடியை சந்திக்க நேரிடும் என கொழும்பு ஊடகமொன்று எதிர்வு கூறியுள்ளது.

மேற்கு ஆசியா மற்றும் வட ஆபிரிக்காவில் உள்ள நாடுகளுக்கு இலங்கையிலிருந்து 50 முதல் 52 வீதமான தேயிலை ஏற்றுமதி செய்யப்படுகிறது.

எனினும், ஈரான் உள்ளிட்ட நாடுகளுக்கே அதிகளவான தேயிலை ஏற்றுமதியை இலங்கை முன்னெடுத்து வருகின்றது.

இந்த நிலையில், மத்திய கிழக்கில் பதற்றம் தொடரும் நிலையில் தேயிலை ஏற்றுமதி பாரியளவில் வீழ்ச்சியடையும் என ஏற்றுமதியாளர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர். (அ)

# "ஈரானிய மக்களுடன் நாங்கள் நிற்கிறோம்"

## அஹ்மதி நிஜாத் மரணம் குறித்து நாமல்

கொழும்பு, மார்ச் 03

முன்னாள் ஈரான் ஜனாதிபதி மஹ்மூத் அஹ்மதி நிஜாத் வான் தாக்குதலில் கொல்லப்பட்டதாக வெளியான தகவலுக்கு பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ அதிர்ச்சி தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கையில், அஹ்மதி நிஜாத் இலங்கையின் நெருங்கிய நண்பர் என்றும், இந்த செய்தி தன்னை மிகவும் அதிர்ச்சியடையச் செய்ததாகவும் கூறினார்.

2008ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அழைப்பின் பேரில் இலங்கை வந்திருந்த அஹ்மதி நிஜாத், சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலைய மேம்படுத்தல் திட்டம் மற்றும் உமா ஓயா பன்முக அபிவிருத்தித் திட்டம் உள்ளிட்ட பல முக்கிய அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பிப்பதில் பங்காற்றியதாக அவர் நினைவு கூர்ந்தார்.

அத்துடன், "இந்த கடினமான நேரத்தில் ஈரான் மக்களுடன் நாங்கள் நிற்கிறோம். அனைத்து தரப்பினரும் அமைதியை கடைப்பிடித்து, போரைத் தவிர்த்து பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண வேண்டும்"-என்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ)

# அரச ஊழியர்கள் வீட்டுக்கடன் ரூபா 50 இலட்சமாக அதிகரிப்பு!

கொழும்பு, மார்ச் 03

அரச ஊழியர்களுக்கு சலுகை வட்டி விகிதத்தில் வழங்கப்பட்டு வந்த வீட்டு வசதி மற்றும் சொத்துக் கடன்களுக்கான அதிகபட்ச எல்லை 50 இலட்சம் ரூபாய் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய நடைமுறை 2026ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட முன்மொழிவுகளுக்கு அமைய நேற்று முன் தினம் முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கான சுற்றறிக்கை பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் ஆலோக பண்டாரவினால் வெளியிடப்பட்டுள்ளது.

பொருளாதார சூழல் மற்றும் கட்டுமானச் செலவுகளைக் கருத்தில் கொண்டும் அரச ஊழியர்களின் நலன் கருதியும் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (அ)

# வவுனியா வடக்கு கல்விச் சமூகம் மீது விரோதத்தை கக்கிய வன்னி மாவட்ட அரச எம்.பிக்கள் மன்னிப்பு கோரவேண்டும்!

## இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை

வவுனியா, மார்ச் 03

வவுனியா வடக்கு கல்வி சமூகத்தின் மீது விரோதத்தை கக்கிய வன்னி மாவட்ட அரச பாராளுமன்ற உறுப்பினர்கள் மன்னிப்பு கோரவேண்டும். இல்லையேனில் போராட்டத்தில் இறங்குவோம் என வவுனியா வடக்கு இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ல.சதீஸ்குமார் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்-

வவுனியா வடக்கு கல்வி வலயம் தொடர்பாகவும் ஆசிரியர்களின் கற்பித்தல் தொடர்பாகவும் மாணவர்களின் பெறுபேறுகள் தொடர்பாகவும் வன்னியை பிரதிநிதித்துவப்படுத்தும் இரு அரச பாராளுமன்ற உறுப்பினர்கள் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் அவதூறுகளை பரப்பியுள்ளனர். இது மிகவும் கண்டிக்கப்படக் கூடியது.

ஆசிரியர்கள் இந்த வலயத்தில் பல இன்னல்களுக்கு மத்தியில் சேவையாற்றும்போது இவ் வலயத்தில் கற்பித்த பாராளுமன்ற உறுப்பினர் தனிப்பட்ட-சொந்த விடயங்களுக்காக ஒட்டு மொத்த வலயத்தை பழி சுமத்துவது வன்மையாக கண்டிக்கத்தக்கது.

அமைச்சரோ இது அபிவிருத்திக் கூட்டம். அதை தனியே கதைப்போம் என்றார். ஆனால் தனிப்பட்ட விரோதம் காரணமாக அக் கூட்டத்தில் ஒரு அதிகாரி கூறும் தரவுகளைக்கூட கேட்காமல் நிற்க வைத்து கேள்வி கேட்கும் இவர்கள் தொடர்பான விடயங்கள் பற்றி பொதுவெளியில் பகிரப்படுவதுடன் இது தொடர்பாக மன்னிப்பு அறிக்கை வெளியிடாவிட்டால் எமது சங்கம் போராட்டத்தில் இறங்கும்-என்று கூறியுள்ளார். (அ)

# மத்திய கிழக்கில் போர்ப் பதற்ற நிலை; இலங்கை அரசியல்வாதிகள் கண்டனம்

கொழும்பு, மார்ச் 03

ஈரான் மீது அமெரிக்க மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகள் கூட்டிணைந்து நடத்திய தாக்குதல்களுக்கு இலங்கையின் அரசியல்வாதிகள் தமது கண்டங்களை பதிவு செய்துள்ளனர்.

அதன்படி, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் ஆக்கிரமிப்புகளுக்கு எதிராக இலங்கை செயற்பட வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், அமெரிக்காவின் மிலேச்சத்தனமான நடவடிக்கைகளுக்கு எதிராக ஒன்றிணையுமாறு மாற்றுக் கொள்கைகளுக்கான அமைப்பின் குமார் குணரத்னம் தெரிவித்துள்ளார்.

வெனிசுவேலா எண்ணெய் குதங்களை இலக்கு வைத்தே, ட்ரம்ப் இவ்வாறு செயல்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதனிடையே, அமெரிக்காவும், இஸ்ரேலும் சர்வதேச சட்டங்களை மீறியுள்ளதாக இலங்கை கம்யுனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது. அறிக்கை ஒன்றை வெளியிட்டு, அந்தக் கட்சி இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, அமெரிக்க ஜனாதிபதியின் கீழ்தரமான செயல்பாடுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபைக்கு இயலுமை இல்லை என முன்னிலை சோஷலிச கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
03.03.2026 செவ்வாய்க்கிழமை
விசுவாவசு வருடம், மாசி 19

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# புலம்பெயர் தமிழர் என்ற "பூச்சாண்டி"

உடம்பில் எந்த பகுதியில் கல்லெறி பட்டாலும் நாய் பின்னங்காலைத்தான் தூக்கிக்கொண்டு ஓடும். அதேபோன்றே தென்னிலங்கை இனவாதிகளும் எந்தவொரு பிரச்சினையையும் சிறுபான்மைச் சமூகங்களுக்கு எதிரான உணர்வுகளின் அடிப்படையில் நடைமுறை யதார்த்தத்துக்கு புறம்பான முறையில் அணுகுவதைப் பழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள்.

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகள் மீண்டும் தீவிரப்படுத்தப்பட்டதை தொடர்ந்து கடந்த வாரம் அரச புலனாய்வு பிரிவின் முன்னாள் தலைவரான ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே கைது செய்யப்பட்டதற்கு எதிராக கிளம்பியிருக்கும் விமல் வீரவன்ச, உதய கம்மன்பில மற்றும் சரத் வீரசேகர போன்ற இனவாத அரசியல்வாதிகள் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் உள்ள விடுதலை புலிகளுக்கு ஆதரவான சக்திகளை திருப்திப்படுத்துவதற்காகவே அவரைக் கைது செய்திருக்கிறது என்று என்ற பிரசாரத்தை முன்னெடுத்திருக்கிறார்கள்.

முன்னைய காலகட்டங்களில் ரணில் விக்கிரமசிங்க இனப்பிரச்சினை தொடர்பில் ஏதாவது நேர்மறையான நடவடிக்கைகளை அறிவித்தால் உடனே அவர் பிரிவினைவாதிகளையும் புலம்பெயர் தமிழர்களையும் திருப்திப்படுத்தும் காரியங்களில் இறங்கியிருப்பதாக இனவாதிகள் கூறுவார்கள்.

போரில் ஆயுதப் படைகளுக்கு அரசியல் தலைமைத்துவத்தை கொடுத்ததாக உரிமை கோரும் ராஜபக்சாக்களுக்கும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் எதிராக முறைகேடுகள் தொடர்பில் ஏதாவது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டால் புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் உள்ள விடுதலை புலிகளின் ஆதரவாளர்களின் நோக்கங்களை நிறைவு செய்வதற்காக அவ்வாறு செய்யப்படுவதாக கூறுவார்கள்.

போருடன் சம்பந்தப்படாத வேறு குற்றச்சாட்டுக்களின் பேரில் பாதுகாப்பு படையதிகாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டால் நாட்டின் ஐக்கியத்தையும் இறைமையையும் பாதுகாக்க தியாகங்கள் செய்த படைகள் அவமதிக்கப்படுகின்றன என்று குற்றஞ்சாட்டுவார்கள்.

தற்போது சுரேஷ் சாலே கைது விவகாரத்திலும் விடுதலை புலிகளுக்கு எதிரான போரில் தனது புலனாய்வு திறமையின் மூலமாக பாரிய பங்களிப்பைச் செய்தவரை புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தை திருப்பதிப்படுத்தவே அவருக்கு எதிராக இந்த நடவடிக்கை என்று அவர்கள் பிரசாரத்தை முன்னெடுத்திருப்பதை காணக்கூடியதாக இருக்கிறது.

ஆனால் ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி. ) தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அவ்வாறு புலம்பெயர் தமிழர்களை திருப்திப்படுத்துவதற்கு முயற்சிக்கிறது என்ற குற்றச்சாட்டு சிங்கள மக்கள் மத்தியில் எடுபடுவதற்கு பெரும்பாலும் வாய்ப்பில்லை.

இந்திய – இலங்கை சமாதான உடன்படிக்கையை தொடர்ந்து வடக்கு, கிழக்கு மாகாணங்களை தற்காலிமாக இணைத்த ஏற்பாட்டை நீதிமன்றம் சென்று இல்லாமல் செய்தவர்கள் ஜே.வி.பி. யினர். ராஜபக்ச அரசாங்கம் போரை முழுவீச்சில் நடத்தி முடிக்க வேண்டும் என்று உந்துதல் கொடுப்பதில் முன்னரங்கத்தில் நின்றவர்களும் தாங்களே என்ற உரிமையைக் கோருபவர்களும் ஜே.வி.பி.யினரே.

அதிகாரத்துக்கு வந்த பின்னர் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதில் எந்த விதமான முயற்சியையும் எடுக்காமல் இருப்பது மாத்திரமல்ல, மாகாணசபை தேரதல்களையும் கூட நடத்துவதில் அக்கறை காட்டாமல் இருப்பவர்களும் ஜே.வி.பி.யினரே. ராஜபக்சக்கள் உட்பட முன்னைய இனவாத ஆட்சியாளர்களுக்கு எந்த விதத்திலும் குறைந்து விடாத அளவுக்கு இனவாத நிலைப்பாடுகளை கொண்டிருப்பதாக தமிழ்த் தேசியவாத சக்திகளும் புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் உள்ள விடுதலை புலிகளின் ஆதரவுச் சக்திகளும் குற்றஞ்சாட்டுவதும் ஜே.வி.பி.யினரையே.

உண்மைநிலை இவ்வாறு இருக்கையில், புலம் பெயர் தமிழச் சமூகத்தை திருப்திப்படுத்த வேண்டிய என்ன அரசியல் தேவை அரசாங்கத்துக்கு இருக்கிறது? இனவாதச் சக்திகளைப் பொறுத்தவரை கற்பனாவாத எதிரிகளை அவ்வப்போது கண்டுபிடிக்காவிட்டால் அவர்களால் அரசியல் செய்யமுடியாது. விடுதலை புலிகள் மீண்டும் தலையெடுக்கப் போகிறார்கள் என்றும் புலம்பெயர் தமிழர்களினால் நாட்டுக்கு ஆபத்து வரப்போகிறது என்றும் பூச்சாண்டி காட்டி சிங்கள மக்களை ஏமாற்றுவதே அவர்களின் அரசியல் மூலதனம்.

# மத்திய கிழக்கு இலங்கையர் குறித்து ஆராய்வதற்கு இன்று விசேட கூட்டம்

## எதிர்க்கட்சித் தலைவர் அழைப்பு

கொழும்பு, மார்ச் 03

மத்திய கிழக்கில் மோதல் சூழ்நிலை ஏற்பட்டுள்ள நிலையில், அங்குள்ள இலங்கையர்களின் நிலைவரம் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக விசேட கூட்டத்துக்கு எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ அழைப்பு விடுத்துள்ளார்.

எதிர்க்கட்சி தலைவர்களுக்கும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்குமே சஜித் பிரேமதாஸவால் இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தில் அமைந்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இன்று இந்த அவசர கூட்டம் நடைபெறவுள்ளது என அறி விக்கப்பட்டுள்ளது. மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவும் மோதல்கள் காரணமாக, பிராந்தியத்தில் பணிபுரியும் இலங்கையர்களின் நலன்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்படவுள்ளது.

மேற்படி மோதல்கள் காரணமாக எதிர்காலத்தில் நமது நாட்டைடபஇலங்கையை பாதிக்கக்கூடிய பிரச்னைகள் குறித்தும் ஆராயப்படவுள்ளது. இதன்போது எட்டப்படும் முடிவுகளின் அடிப்படையில் சில யோசனைகள் அரசாங்கத்திடம் கையளிக்கப்படவுள்ளது. (அ)

# பாடசாலை கிரிக்கெட் போட்டிகளின்போது மாணவர்கள் ஒழுக்கத்தை பேண வேண்டும்

## பொலிஸார் அறிவுறுத்தல்

கொழும்பு, மார்ச். 03

பாடசாலைகளுக்கு இடையிலான வருடாந்த கிரிக்கெட் போட்டி காலப்பகுதியில், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் ஒழுக்கத்துடனும் பொறுப்புடனும் செயல்படுமாறு பொலிஸார் விசேட அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளனர்.

பாடசாலைகளின் கௌரவத்தையும் நற்பெயரையும் பாதுகாக்கும் வகையில் வழிகாட்டல்களை பின்பற்றுமாறு பொலிஸ் ஊடகப் பிரிவு கேட்டுக்கொண்டுள்ளது.

இதற்கமைய, பொது இடங்களில் பாடசாலையின் கௌரவத்துக்கு இழுக்கு ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். வீதிகளில் சத்தமிடுவதையோ அல்லது போக்குவரத்துக்கு இடையூறு விளைவிப்பதையோ தவிர்க்க வேண்டும்.

ஏனைய பாடசாலை மாணவர்களுடன் தர்க்கங்கள் அல்லது மோதல்களில் ஈடுபடக்கூடாது என்று அறிவுறுத்தியுள்ளனர். (எ)

# திடீரென தீப்பிடித்த மோட்டார் சைக்கிள்


## மருதனார்மடத்தில் பரபரப்பு

யாழ்ப்பாணம், மார்ச். 03

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மருதனார்மடம் பகுதியில் நேற்றுக்காலை மோட்டார் சைக்கிள் ஒன்று திடீரென தீப்பிடித்து எரிந்தது.

குறித்த மோட்டார் சைக்கிள் தானாகவே தீப்பற்றி எரிந்ததா அல்லது யாராவது தீ மூட்டினரா என இதுவரை தகவல்கள் எவையும் வெளியாகவில்லை.

இந்தச் சம்பவம் குறித்து சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-05)




# "முழு நாடுமே ஒன்றாக" நாடளாவிய ரீதியில் 1,286 பேர் சிக்கினர்

கொழும்பு, மார்ச். 03

ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய, நாட்டில் போதைப்பொருளை தடுக்கும் நோக்கிலான "முழு நாடுமே ஒன்றாக" எனும் தேசிய திட்டத்தின் கீழ், நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் சுமார் 1,286 பேர் போதைப்பொருட்களுடன் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், தடுப்புக்காவல் உத்தரவு பெற்ற 04 பேர் கைது செய்யப்பட்டனர். இதேவேளை, 1,290 சோதனைகள் நடத்தப்பட்டுள்ளதுடன், 02 பேர் புனர்வாழ்வு நிலையத்துக்கு அனுப்பிவைக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளனர். குறித்த போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளின்போது சிக்கிய சந்தேக நபர்கள் வைத்திருந்த போதைப்பொருட்களையும் இதன்போது பொலிஸார் கைப்பற்றினர். (எ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்ச் - 03 செவ்வாய்க்கிழமை
விசுவாவசு வருடம் - மாசி 19

நல்ல நேரம் : 07.31 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : பவுர்ணமி




**மேடம்**
புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். உறவினர்கள் வீடு தேடிவருவார்கள். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். மதிப்பார்கள். புதுமை படைக்கும் நாள்.

**இடபம்**
திட்டமிட்ட காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். தாய்வழி உறவினர்களுடன் மனஸ்தாபம் வந்து நீங்கும். கலைப் பொருட்கள் வாங்குவீர்கள். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள்.

**மிதுனம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். நண்பர்கள் உறவினர்கள் மத்தியில் செல்வாக்கு உயரும். வியாபாரத்தில் புதுஒப்பந்தங்களால் லாபம் அடைவீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கருத்திற்கு ஆதரவு பெருகும்.

**கடகம்**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் பல வேலைகளையும் இழுத்துப் போட்டு பார்க்க வேண்டி வரும். உங்களை மாற்றிக் கொள்ளப் பாருங்கள். அடைவார்கள். சகிப்புத் தன்மை தேவைப்படும் நாள்.

**கன்னி**
குடும்பத்தை பற்றிய கவலைகள் வந்து போகும். புதியவர்களை நம்பி ஏமாற வேண்டாம். வியாபாரத்தில் பாக்கிகளை போராடி வசூலிப்பீர்கள். சோர்வு நீங்கும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**துலாம்**
ஆன்மிகப் பெரியோரின் ஆசி கிட்டும். பெற்றோரின் ஆதரவு பெருகும். நெடுநாட்களாக நீங்கள் பார்க்க நினைத்த ஒருவர் உங்களை தேடி வருவார். ஒத்துழைப்பால் நினைத்ததை முடிப்பீர்கள்.

**விருட்சிகம்**
எதையும் சமாளிக்கும் மனப்பக்குவம் கிடைக்கும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் உதவுவார்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். அலுவலகத்தில் மரியாதைக் கூடும். முயற்சியால் முன்னேறுவீர்.

**தனுசு**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் உண்டு. திடீர் பணவரவு உண்டு. புது முடிவுகள் எடுப்பீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி மதிப்பார். வியாபாரத்தை பெருக்குவீர்கள். புதிய பாதை தெரியும்.

**மகரம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிக்கலான சவாலான வேலைகளை எல்லாம் கையில் எடுத்து கொள்ளாதீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களை பகைத்து கொள்ளாதீர்கள். புதிய முயற்சிகள் பலிதமாகும்.

**கும்பம்**
பிள்ளைகள் உங்கள்அருமையைப் புரிந்துகொள்வார்கள். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். உயரதிகாரி உங்கள் கோரிக்கையை ஏற்பார்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**மீனம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். நெருங்கியவர்களுக்காக மற்றவர்களின் உதவியை நாடுவீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள்.


# வடமராட்சியில் ஒரு நிலையத்தில் மட்டுமே எரிபொருள் விநியோகம்

யாழ்ப்பாணம், மார்ச். 03

வடமராட்சியில் ஒரே ஒரு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மட்டுமே நேற்று எரிபொருள் விநியோகிக்கப்பட்டது.

பருத்தித்துறை துறைமுகம் அருக்காமையில் உள்ள தனியார் எரிபொருள் நிரப்பு நிலையம் இரவு - பகலாக எரிபொருளை விநியோகம் செய்து வருகிறது.

குஞ்சர் கடை, நெல்லியடி, மந்திகை, வல்வெட்டித்துறை, கிராமக்கோடு ஆகிய எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் இல்லை என்று அறிவித்தல் பலகை வைக்கப்பட்டுள்ளது. எனினும், மக்கள் தங்கள் வாகனங்களை நிறுத்திவிட்டு எரிபொருள் நிரப்புவதற்காக நீண்டநேரமாக காத்திருக்கின்றனர். (எ-08)



# புதுக்குடியிருப்பில் சட்டவிரோத மதுபானத்துடன் இளைஞன் கைது

முல்லைத்தீவு, மார்ச். 03

புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உடையார் கட்டு குளம் பகுதியில் சட்டவிரோத மதுபானத்தை வைத்திருந்த சந்தேகநபர் ஒருவரை பொலிஸார் கைது செய்தனர்.


புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்களுக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, உடையார்கட்டு குளம் அருகே நேற்று முன்தினம் விசேட தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த 100 லீற்றர் (135 போத்தல்கள்) சட்டவிரோத மதுபானத்தை பொலிஸார் கைப்பற்றினர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் உடையார்கட்டு பகுதியைச் சேர்ந்த 30 வயது இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரை நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் புதுக்குடியிருப்பு பொலிஸார், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# அம்மன் ஆலய தேர்த் திருவிழா



கிளிநொச்சி, மார்ச். 03

கிளிநொச்சி- தர்மபுரம் நெத்திலி ஆறு முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மாசி மக அலங்கார உற்சவத்தின் தேர்த் திருவிழா நேற்று முன்தினம் நடைபெற்றது. (எ)

# அராலியில் திருவிளையாடல் புராண சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மார்ச். 03

அராலி கிழக்கு மலையாளங்காடு ஐயனார் கோவிலில் சைவ வாழ்வியலில் திருவிளையாடல் புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் நடத்தும் வாராந்தத் திருவிளையாடல் புராணச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் 47 எதிர்வரும் 06 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 04.00 மணிக்கு நடைபெறவுள்ளது. பரஞ்சோதிமுனிவர் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலை நிகழ்வும்,சைவப் புலவர் பொன். சந்திரவேல் “வலை வீசின படலம்” என்னும் தலைப்பில் நிகழ்த்தும் சொற்பொழிவும் நடைபெறவுள்ளன.

சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

# நீர்வேலியில் சுக்கிரவார சிறப்பு சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மார்ச். 03

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி கோவில் நடத்தும் வாராந்த சுக்கிரவார கந்தபுராண படனத் தொடர் 46ஆவது சொற்பொழிவு கோவில் சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் 06ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 05. 30 மணிக்கு சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது. கோவிலின் பிரதம குருக்கள் ஸ்கந்தகுரு ஞானபானு, சிவசிறீ இராஜேந்திர சுவாமி நாதக்குருக்களின் ஆசியுரையை தொடர்ந்து தலைமையுரையை பரிபாலன சபைத் தலைவர் சி. தயாநாதனும், சிறப்புச்சொற்பொழிவை சைவப்புலவர், கந்த. சத்தியதாசன் “விந்தகிரிப் படலம்” என்னும் தலைப்பில் நிகழ்த்தும் சிறப்புச்சொற்பொழிவும், சொற்பொழிவில் இருந்து நீர்வைக் கந்தன் புராண இதிகாசப் பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (எ)

# இசை நிகழ்ச்சிக்காக கொழும்பு சென்ற வல்வெட்டித்துறை இளைஞன் மரணம்!

கொழும்பு, மார்ச். 03

கொழும்பு துறைமுக நகர கடலில் மிதந்த நிலையில் இளைஞன் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

துறைமுக நகரக் கடலில் சடலமொன்று மிதப்பதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, சம்பவ இடத்துக்கு விரைந்த கொழும்பு துறைமுக பொலிஸார் சடலத்தை மீட்டனர்.

உயிரிழந்தவர் யாழ்ப்பாணம், வல்வெட்டித்துறை பகுதியைச் சேர்ந்த 24 வயது இளைஞன் என்று அடையாளம் காணப்பட்டார்.

விசாரணைகளின்படி, குறித்த இளைஞன் கடந்த 28 ஆம் திகதி துறைமுக நகர வளாகத்தில் நடைபெற்ற இசை நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்பதற்காக சென்றவர் என்று தெரியவந்துள்ளது.

இசை நிகழ்ச்சிக்கு சென்றவர் எவ்வாறு கடலில் சடலமாக மீட்கப்பட்டார் என்பது தொடர்பில் மர்மம் நீடிக்கிறது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13, 416 டெங்கு நோயாளர்கள் இவ்வருடத்தில் இதுவரை பதிவு

**2 நாட்களுக்கு மேல் காய்ச்சல் இருந்தால் கவனம்**

கொழும்பு, மார்ச். 03

இந்த வருடத்தில் இதுவரை 13, 416 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்று தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், டெங்கு நோயினால் இதுவரை 4 மரணங்களும் பதிவாகியுள்ளன என்று அப்பிரிவின் சமூக மருத்துவ நிபுணர் பிரஷிலா சமரவீர குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களிலேயே அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதுடன், காலி, மாத்தறை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களிலும் டெங்கு நோயாளர்கள் அதிகளவில் பதிவாகி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இரண்டு நாட்களுக்கு மேல் காய்ச்சல் நீடிக்குமாயின் உடனடியாக தகுதிவாய்ந்த மருத்துவரை நாடிச் சிகிச்சை பெறுமாறு சுகாதார பிரிவினர் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)

"முழு நாடுமே ஒன்றாக"

# நாடளாவிய ரீதியில் 1,286 பேர் சிக்கினர்

கொழும்பு, மார்ச். 03

ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய, நாட்டில் போதைப்பொருளை தடுக்கும் நோக்கிலான "முழு நாடுமே ஒன்றாக" எனும் தேசிய திட்டத்தின் கீழ், நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் சுமார் 1,286 பேர் போதைப்பொருட்களுடன் கைதுசெய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், தடுப்புக்காவல் உத்தரவு பெற்ற 04 பேர் கைது செய்யப்பட்டனர். இதேவேளை, 1,290 சோதனைகள் நடத்தப்பட்டுள்ளதுடன், 02 பேர் புனர்வாழ்வு நிலையத்துக்கு அனுப்பி வைக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளனர். குறித்த போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளின் போது சிக்கிய சந்தேக நபர்கள் வைத்திருந்த போதைப்பொருட்களையும் இதன்போது பொலிஸார் கைப்பற்றினர். (எ)

# பேருந்து சேவை முடங்காமல் இருக்க துரித நடவடிக்கை எடுக்க வேண்டும்

**தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம்**

கொழும்பு, மார்ச். 03

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக நீண்ட வரிசைகள் உருவாகுமானால், பொதுப் போக்குவரத்துச் சேவையை முன்னெடுத்துச் செல்வது கடினமாகும். எனவே, பேருந்து சேவை முடங்காமல் இருக்க இலங்கை போக்குவரத்துச் சபையின் எரிபொருள் நிலையங்கள் ஊடாகத் தடையின்றி டீசல் வழங்க அரசாங்கம் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரத்ன வலியுறுத்தியுள்ளார்.

மத்திய கிழக்கு நாடுகளில் தீவிரமடைந்துள்ள போர்ச் சூழலை அடுத்து, நாட்டின் பல பகுதிகளிலும் உருவாகியுள்ள எரிபொருள் வரிசை தொடர்பில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மத்திய கிழக்கு நாடுகளில் உருவாகியுள்ள போர்ச் சூழல் மற்றும் உலகளாவிய எண்ணெய் விநியோகத்தின் முக்கிய பாதையான ஹோர்முஸ் நீரிணை மூடப்பட்டுள்ளமை குறித்து அரசாங்கம் தீவிர கவனம் செலுத்த வேண்டும். இத்தருணத்தில் எரிபொருளை மிகவும் சிக்கனமாகப் பயன்படுத்துமாறு மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவது அரசாங்கத்தின் பொறுப்பாகும். எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய எரிபொருள் தட்டுப்பாட்டை எதிர்கொள்ள இப்போதே முறையான திட்டமொன்றை அரசாங்கம் முன்னெடுப்பது அவசியம் என்றும் அவர் கூறினார். (எ)

# மொனராகலையில் 3 பாரிய கஞ்சா சேனைகள் முற்றுகை

**46,000இற்கும் அதிகமான கஞ்சா செடிகள் அழிப்பு**

மொனராகலை, மார்ச். 03

மொனராகலை - எத்திமலை பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின்போது, கஞ்சா சேனைகள் முற்றுகையிடப்பட்டதோடு, உலர்ந்த கஞ்சா என்பன விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டதாகவும் பெருமளவு கஞ்சா செடிகள் அழிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சியம்பலாண்டுவ விசேட அதிரடிப்படை முகாம் அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய, இந்தச் சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, 2 ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டிருந்த 30, 000 கஞ்சா செடிகளும், ஒரு ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டிருந்த 8,000 கஞ்சா செடிகளும், மற்றுமொரு ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டிருந்த 8,500 கஞ்சா செடிகளும் அழிக்கப்பட்டன. (எ)




# மனைவியை கொன்று தப்பியோடிய கணவன்

கொழும்பு, மார்ச். 03

தனது மனைவியைக் கொலை செய்துவிட்டு தப்பியோடிய கணவனைக் கைது செய்வதற்காக மாரவில பொலிஸார் விசேட விசாரணைகளை ஆரம்பித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் மாரவில, கட்டுநேரிய - பேன்கட பிரதேசத்தை சேர்ந்த 44 வயது பெண் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கொலை தொடர்பில் நேற்று முன்தினம் இரவு 11. 40 மணியளவில் பொலிஸ் அவசர அழைப்பு இலக்கத்துக்கு தகவல் கிடைத்துள்ளது.

இதற்கமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது, உயிரிழந்த பெண்ணின் சடலம் வீட்டின் படுக்கையறையிலிருந்து மீட்கப்பட்டது.

குடும்பத் தகராறு காரணமாக இந்தக் கொலை இடம்பெற்றிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

மனைவியின் கழுத்தை கணவன் கத்தியால் அறுத்துக் கொலை செய்ததாகவும், சந்தேகநபரான கணவன் தற்போது பிரதேசத்தை விட்டுத் தப்பியோடியதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (எ)

# கட்டுநாயக்கவிலிருந்து சகல விமான சேவைகளும் இரத்து

கொழும்பு, மார்ச். 03

மத்திய கிழக்கில் தீவிரமடைந்துள்ள போர்ச் சூழல் காரணமாக, கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து மத்திய கிழக்கு நாடுகளுக்குப் பயணிக்கவிருந்த அனைத்து விமான சேவைகளும் நேற்று இரத்து செய்யப்பட்டன.

போர் மோதல்கள் ஆரம்பித்த கடந்த 28ஆம் திகதி முதல் இதுவரை, மத்திய கிழக்கிலிருந்து இலங்கைக்கு வரவிருந்த மற்றும் இங்கிருந்து மத்திய கிழக்கு நாடுகளுக்குப் பயணிக்கவிருந்த 115 விமான சேவைகள் முற்றாக இரத்து செய்யப்பட்டதாக கட்டுநாயக்க விமான நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சர்வதேச விசாரணை நடந்தால் சாட்சிகள் சொல்ல பலர் தயார்"

மட்டக்களப்பு, மார்ச். 03

சுரேஷ் சாலே கைது செய்யப்பட்டமை நல்ல விடயம். அதே வேளை, சாட்சிகள் சொல்ல இன்றும் பலர் தயார் என்று இலங்கை தமிழ் அரசுக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

சர்வதேச அங்கீகாரத்துடன் கூடிய ஒரு விசாரணையை நடத்தினால்தான் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல், பொறுப்புக் கூறல் தொடர்பில் ஒரு நிரந்தரத் தீர்வை அரசாங்கம் வழங்கக் கூடியதாக இருக்கும் என்றும் அவர் கூறினார்.

மட்டக்களப்பு- செங்கலடி பிரதேசத்துக்குட்பட்ட ரமேஷ்புரம், கணபதி நகர், ஐயன்கேணி ஆகிய அறநெறி பாடசாலைகளில் கல்வி கற்கும் 6 ஆம் தரத்துக்கு மேற்பட்ட வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழும் மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்களை வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

சுரேஷ் சாலே கைது மூலம் இலங்கை வரலாற்றில் நடக்காத ஒன்று நடந்திருக்கின்றது. அரசாங்கத்தின் இவ்வாறான நல்ல விடயங்களை நாங்கள் ஏற்றுக் கொள்கின்றோம், நல்ல விடயங்களை நாங்கள் எதிர்ப்பது இல்லை. அந்த வகையில் சுரேஷ் சாலே போன்ற உயர்மட்ட இராணுவப் புலனாய்வுத்துறையினர், இராணுவ அதிகாரிகளை கைது செய்வது இந்த அரசாங்கம் செய்துள்ள பெரியதொரு நல்ல விடயம். சர்வதேச விசாரணை நடைபெற்றால் சாட்சிகள் சொல்ல இன்றும் பலர் தயாராகவுள்ளனர். - என்றார். (எ)

# சந்நிதியான் ஆச்சிரமத்தால் கிழக்கில் உதவித் திட்டங்கள்

திருகோணமலை, மார்ச். 03


தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் கிழக்கு மாகாணம் திருகோணமலை- ஈச்சிலம்பற்று பிரதேச செயலக பிரிவின் வெருகல் பிரதேசத்தில் அமைந்துள்ள அறநெறிப் பாடசாலைகளான, கறுக்காமுனை அறநெறிப் பாடசாலையைச் சேர்ந்த 48 மாணவர்களுக்கும், புன்னையடி அறநெறிப் பாடசாலையைச் சேர்ந்த 27 மாணவர்களுக்கும் 85,000 ரூபாய் பெறுமதியான சீருடைத் துணிகள் 2ஆம் கட்டமாக வழங்கப்பட்டன.

இதேவேளை, அம்பாறை பொத் துவில் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட குண்டுமடு அறநெறிப் பாடசாலையைச் சேர்ந்த 102 மாணவர்களுக்கு 42, 000 ரூபாய் பெறுமதியான சீருடைத் துணிகள் வழங்கப்பட்டன.

அத்தோடு, அம்பாறை திருக்கோவில் பிரதேச செயலக பிரிவில் உள்ள, தங்கவேலாயுதபுரம், கஞ்சிகுடிச்சாறு கிராமங்களைச் சேர்ந்த, தாண்டியடி விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தில் தரம் - 07, சாதாரண தரம் மற்றும் தரம் - 10 இல் கல்வி கற்கும் 05 மாணவர்களுக்கும், திருக்கோவில் மெதடிஸ் மிஷன் தமிழ் மகா வித்தியால யத்தில் தரம் - 07 இல் கல்வி கற்கும் மாணவிக்கும், துவிச்சக்கர வண்டிகள் தங்கவேலாயுதபுரம் மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தில் வைத்து வழங்கப்பட்டன.

குறித்த 3 இலட்சம் ரூபாய் பெறுமதியான உதவிகளை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் மோகனதாஸ் சுவாமிகள், தொண்டர்களுடன் நேரில் சென்று வழங்கினார். (எ)

# சின்னமுகத்துவாரப்பகுதியில் விற்பனை நிலையம் திறப்பு



ஆலையடிவேம்பு, மார்ச். 03

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் 2. 4 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டின் கீழ், ஆலையடிவேம்பு பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட சின்னமுகத்துவாரப்பகுதியில் எமது முன்னோர்களின் பாரம்பரிய உணவுகளை விற்பனை செய்யும் விற்பனை நிலையம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில், அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம்பாவா பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். (எ)

# சிவனொளிபாத மலையில் அறுவர் கைது

கொழும்பு, மார்ச். 03

சிவனொளிபாத மலைக்கு யாத்திரை சென்ற ஆறு இளைஞர்கள் பல்வேறு போதைப் பொருட்களுடன் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நல்லத்தண்ணி நகரில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 25 முதல் 33 வயதுக்கு இடைப்பட்டவர்கள் எனவும் மொறட்டுவை, மாத்தறை, பாயாகலை, வங்கதெனிய, ஹக்மனை மற்றும் மீகொட ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து கஞ்சா, ஐஸ், போதை மாத்திரைகள் மற்றும் சட்டவிரோத வெளிநாட்டு சிகரெட்கள் என்பன கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# அனல் மின் நிலையத்தில் பாரிய திருட்டு சம்பவம்

## இருவர் பொலிஸாரால் கைது

நிந்தவூர், மார்ச். 03

நீண்டகாலமாக செயல்படாமல் இருந்த தனியார் அனல் மின் நிலையம் ஒன்றில் இடம்பெற்ற பாரிய திருட்டு சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் சந்தேகத்தின் பேரில் நிந்தவூர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்

அம்பாறை மாவட்டம், நிந்தவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குறித்த மின் நிலையத்தில் நீண்டகாலமாக திருட்டு இடம்பெற்று வருவதாக அதன் உரிமையாளர் அண்மையில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

இதற்கமைய செயல்பட்ட பொலிஸார், மேலதிக விசாரணைகளுக்காக அம்பாறையிலிருந்து தடயவியல் பொலிஸாரை சம்பவ இடத்துக்கு அழைத்திருந்தனர். இதன் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் போது, குறித்த மின் நிலையத்தின் காவலாளி உட்பட மற்றுமொரு சந்தேக நபரையும் பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். விசாரணைகளின் பின்னர் அவர்களை சட்ட நடவடிக்கைக்காக சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர், தன்னிடம் இருந்த வாயுத் துப்பாக்கியைப் பயன்படுத்தி மின் நிலையத்தில் உள்ள புறாக்களை வேட்டையாட வந்ததாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிவித்துள்ளார். எனினும், அவரிடமிருந்து மீட்கப்பட்ட வாயுத் துப்பாக்கி குறித்தும் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ-01)

# "முழு நாடும் ஒன்றாக" தேசிய செயல்திட்ட நிகழ்வு



மட்டக்களப்பு, மார்ச். 03

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் பணிப்புரைக்கமைய நாடளாவிய ரீதியில் போதைப் பொருளுக்கு எதிரான செயல் திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டு வருகின்றன.

இதன் ஓர் அங்கமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் "முழு நாடும் ஒன்றாக" தேசிய செயல் திட்ட நிகழ்வுகள் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் ஜே. எஸ். அருள்ராஜ் தலைமையில் மாவட்ட போதைப்பொருள் தடுப்பு உத்தியோகத்தர் ப. தினேஷ் ஏற்பாட்டில் காந்தி பூங்காவில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இதன்போது "விற்கின்ற - அடிமையான அனைவருக்குமான அறிவித்தல் - அகன்று செல்" எனும் வாசகத்தை மையமாகக் கொண்டு துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

மார்ச் மாதம் முதல் "முழு நாடும் ஒன்றாக - தேசிய செயல்" திட்டத்துடன் இணைந்து போதைப்பொருள் தடுப்பு வாரம் நடைமுறைப்படுத்தப் பட்டு வருவதுடன் பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் துண்டுப் பிரசுரங்களை, சுவரொட்டிகள் என்பனவும் வழங்கப்பட்டன. (எ)

உயர்தர வகுப்புகள் யாவும்

# 25 ஆம் திகதிக்கு பின்னரே ஆரம்பிக்கப்பட வேண்டும்

கல்முனை, மார்ச். 03

இம்முறை க. பொ. த. சாதாரண தரப் பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான உயர்தர புதிய வகுப்புகள் யாவும் எதிர்வரும் 25 ஆம் திகதிக்குப் பின்னரே ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று கல்முனையில் இயங்கும் தனியார் கல்வி நிலையங்களுக்கு கல்முனை மாநகர சபை அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

பெற்றோர்கள் மற்றும் பொது நல அமைப்புகள் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக குறித்த மாணவர்களின் நலன் கருதி இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப் பட்டுள்ளது என்று கல்முனை மாநகர சபை ஆணையாளர் எம். றாபி தெரிவித்தார். (எ)

லிந்துலையில் தீ விபத்து:

# 10 லயன் குடியிருப்புகள் முற்றாக எரிந்து நாசம்!

நுவரெலியா, மார்ச். 03

லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வோல்ட்ரீம் தோட்டத்தில் ஏற்பட்ட தீ பரவலினால் 10 வீடுகளைக் கொண்ட லயன் குடியிருப்பொன்று முற்றாக எரிந்து அழிந்தது.

திடீரென பரவிய தீயினால் அந்தத் தொகுதியில் இருந்த 10 அறைகளும் தீக்கிரையாகின. தீ பரவிய சந்தர்ப்பத்தில் குடியிருப்பாளர்கள் எவரும் வீடுகளில் இருக்கவில்லை என்பதால், அதிர்ஷ்டவசமாக உயிரிழப்புகளோ அல்லது காயங்களோ ஏற்படவில்லை. (எ)

# தொல்பொருள் தேடி அகழ்வு: பெண் உட்பட மூவர் கைது

கண்டி, மார்ச். 03

உடுதும்பர பிரதேசத்தில் தொல்பொருட்களை தேடும் நோக்கில் சட்டவிரோதமாக அகழ்வுப் பணிகளில் ஈடுபட்ட பெண் உட்பட மூவரை பொலிஸார் கைது செய்தனர்.

உடுதும்பர பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் நேற்றுக்காலை மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது, அகழ்வுப் பணிகளுக்காக இவர்கள் பயன்படுத்திய உபகரணங்களையும் பொலிஸார் கைப்பற்றியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



## அமெரிக்காவுடன்...

நம்பிக்கைகளால் பிராந்தியத்தை குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளார். அமெரிக்க துருப்புக்களுக்கு உயிரிழப்புகள் அதிகரிக்கும் என்று இப்போது அவர் கவலைப்படுகிறார்.

தனது ஆளுமையை நிலை நாட்டிக்கொள்வதற்கான விலையை, அமெரிக்க படையினர் மற்றும் குடும்பங்கள் மீது சுமத்துகிறார். இன்று, ஈரான் தன்னைத்தானே பாதுகாத்துக் கொள்கிறது.

ஈரானிய ஆயுதப்படைகள் படையெடுப்பைத் தொடங்கவில்லை. நாங்கள் அமெரிக்காவுடன் பேச்சு நடத்த மாட்டோம்" எனவும் ஈரான் தேசிய பாதுகாப்பு சபையின் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

போரை முடிவுக்குக் கொண்டு வரும் நோக்கில் ஈரான், அமெரிக்காவுடன் ஓமான் அரசு மூலம் பேச்சு முன்னெடுப்பதாக அமெரிக்க ஊடகங்களில் செய்திகள் வெளியாகி இருந்த நிலையிலேயே ஈரான் தரப்பில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## ட்ரம்ப் எடுக்கும்...

இவ்வாறான உலக அரசியல் போக்குகள் இலங்கைக்குச் சாதகமானவை அல்ல .

ஜனாதிபதி ட்ரம்ப் உலகம் தனது விருப்பப்படி இயங்க வேண்டுமென எதிர்பார்க்கிறார், ஆனால் இது போன்ற ஆழமான பிரச்னைகள் சிறிய நாடுகளுக்குப் பாதிப்பையே ஏற்படுத்தும்-என்றார். (அ)

## மத்திய கிழக்கு...

அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள போர் சூழ்நிலை மற்றும் எரிபொருள் விவகாரம் தொடர்பில் தெளிவுபடுத்துவதற்காக அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று விசேட ஊடகவியலாளர் மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சரவைப் பேச்சாளரான நளிந்த ஜயதிஸ்ஸ மேற்கண்டவாறு கூறினார்.

"உயிரிழப்புகளையும், பேரிழப்புகளையுமே போர் தரும். எனவே, எங்கு நடந்தாலும், எவர் நடத்தினாலும் போரை ஒருபோதும் அனுமதிக்கவே முடியாது.

மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள போர் உலக அமைதி, பிராந்திய ஸ்தீரத்தன்மை மற்றும் உலக பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

உலக அமைதிக்காக இலங்கை அர்ப்பணிப்புடன் செயல்படும். அந்தவகையில் மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள போரை முடிவுக்கு கொண்டுவருமாறு அனைத்து தரப்புகளிடமும் இலங்கை கோருகின்றது.

அதேவேளை, மத்திய கிழக்கிலுள்ள இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த மற்றும் அவர்களுக்கு தேவையான உதவிகளை வழங்குவது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றது.

உள்நாட்டிலுள்ள சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பு தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது." என அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ மேலும் குறிப்பிட்டார். (அ)

## காங்கேசன்...

அத்துடன் வழமைபோல் செவ்வாய்க்கிழமை தவிர்ந்த ஏனைய 6 நாட்களும் குறித்த கப்பல் சேவை இடம்பெறும்.

றறற.ளயடைளரடிாயஅ.உழஅ என்ற இணைத்தளத்திற்குள் பிரவேசிப்பதனூடாகவோ அல்லது 0212224647, 0117642117 என்ற இலக்கங்களுக்கு அழைப்பு மேற் கொள்வதன் மூலமாகவோ பயணச்சீட்டுகளை பதிவு செய்துகொள்ள முடியும் என அவர் மேலும் குறிப்பிட்டார். (அ-05)

## இஸ்ரேல் பிரதமர்...

இஸ்லாமிய புரட்சிகர காவல் படை தெரிவித்துள்ளது.

அதேபோல், இஸ்ரேல் விமானப் படை தளபதியின் இருப்பிடம் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், இந்த தாக்குதல்களை கெய்பர் ஷேகான் பாலிஸ்ரிக் ஏவுகணைகள் மூலம் துல்லியமாக நடத்தியதாகவும், ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர காவல் படை குறிப்பிட்டுள்ளது.

ஆனால், தாக்குதல் நடத்தப்பட்ட வேளை, இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அவரது

# எரிபொருளுக்கு கியூ.ஆர். இப்போது தேவையில்லை!

கொழும்பு, மார்ச் 03

நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு நிலவும் சந்தர்ப்பத்திலேயே கியூ.ஆர். முறையைப் பயன்படுத்தி எரிபொருள் விநியோகத்தை மட்டுப்படுத்தவேண்டும் எனவும், தற்போது நாட்டில் போதியளவு எரிபொருள் கையிருப்பு உள்ளதால் கியூ.ஆர். முறையைப் பயன்படுத்த வேண்டிய எவ்வித அவசியமும் இல்லை எனவும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் டி.ஜே. ராஜகருணா தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், சட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் நிலைமையைக் கட்டுப்படுத்த முடியாத சூழ்நிலை ஏதேனும் ஏற்பட்டால், அவ்வாறான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கியூ.ஆர். முறையைப் பயன்படுத்தத் தயாராக இருப்பதாகவும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

நேற்றும் வழமை போன்று எரிபொருள் விநியோகப் பணிகள் முன்னெடுக்கப்பட்டதாகவும், காலை 9.45 மணி வரை 29 இலட்சத்து 25 ஆயிரத்து 349 லீற்றர் டீசலும், 29 இலட்சத்து 4 ஆயிரம் லீற்றர் ஒக்ரைன் 92 ரக பெற்றோலும் விநியோகிக்கப்பட்டுள்ளதாக டி.ஜே. ராஜகருணா தெரிவித்தார்.

தொடர்ச்சியாக எரிபொருளை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், அதற்கான போதியளவு எரிபொருள் கையிருப்பில் உள்ளதால் மக்கள் தேவையற்ற அச்சம் கொள்ளத் தேவையில்லை எனவும் அவர் மீண்டும் வலியுறுத்தினார். (அ)

# இஸ்ரேலில் இலங்கை பெண் காயம்!

டெல் அவிவ், மார்ச் 03

இஸ்ரேலில் நிலவி வரும் போர்ச் சூழலில் அங்கு பணியாற்றி வரும் இலங்கை பெண் ஒருவர் வான்வழித் தாக்குதலில் காயமடைந்துள்ளதாக இஸ்ரேலுக்கான இலங்கை தூதுவர் நிமல் பண்டார உறுதிப்படுத்தியுள்ளார்.

வடக்கு இஸ்ரேல் பகுதியில் பராமரிப்பாளராக பணியாற்றி வரும் கடவத்தை பகுதியைச் சேர்ந்த 43 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

தாக்குதலால் ஏற்பட்ட அதிர்ச்சி மற்றும் சிறு காயங்களுக்கு உள்ளான அவர், உடனடியாக மருத்துவ மையத்தில் அனுமதிக்கப்பட்டார்.

அவரது உடல்நிலை கவலைக்கிடமாக இல்லை என்றும், தேவையான மருத்துவ சிகிச்சையின் பின்னர் அவர் தற்போது வீடு திரும்பியுள்ளதாகவும் தூதுவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

அலுவலகத் தில் இருந்தாரா என்ற தகவல் வெளியாகவில்லை. (அ)

## புகலிட...

இனி ஏதிலி அந்தஸ்து பெறுபவர்களுக்குத் தற்காலிக பாதுகாப்பு மட்டுமே வழங்கப்படும். இவர்களின் வழக்குகள் ஒவ்வொரு 30 மாதங்களுக்கும் (2.5 ஆண்டுகள்) ஒருமுறை மறுஆய்வு செய்யப்படும்.

மறுஆய்வின் போது சம்பந்தப்பட்ட நபரின் தாய்நாடு பாதுகாப்பானது எனக் கருதப்பட்டால், அவர்கள் மீண்டும் அந்த நாட்டிற்கே திருப்பி அனுப்பப்படுவார்கள்.

துணையின்றித் தனியாக வரும் சிறுவர்களுக்கு இந்த 30 மாத மறுஆய்வு விதியிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

ஏதிலிகள் நிரந்தரக் குடியுரிமைக்கு விண்ணப்பிப்பதற்கான காலம் 5 ஆண்டுகளிலிருந்து 20 ஆண்டுகள் வரை அதிகரிக்கப்படவுள்ளது. சாதாரண குடியேறிகளுக்கு இது 5 ஆண்டுகளிலிருந்து 10 ஆண்டுகளாக அதிகரிக்கப்படும்.

கடந்த வாரம் டென்மார்க்கிற்குப் பயணம் மேற்கொண்ட ஷபானா மஹ்மூத், அங்குள்ள கடுமையான ஏதிலி சட்டங்களை நேரில் ஆய்வு செய்தார். டென்மார்க்கைப் போலவே பிரித்தானியாவிலும் அகதிகள் தங்குவதற்கான விடுதி முறையை ஒழித்து, அடிப்படை வசதிகள் கொண்ட பொது விடுதிகளுக்கு அவர்களை மாற்றப் போவதாக அவர் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

"சட்டவிரோதமாகப் படகுகள் மூலம் வருபவர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதே எமது நோக்கம். ஏதிலி அந்தஸ்து என்பது ஒருவருக்கு நிரந்தரக் குடியுரிமையை உடனே பெற்றுத் தரும் என்ற எண்ணத்தை மாற்றப் போகிறோம்" ஷபானா மஹ்மூத் தெரிவித்துள்ளார்.

இந்த முடிவானது தீவிர வலதுசாரி கொள்கைகளைப் பின்பற்றுவது போல் இருப்பதாகத் தொழிற்கட்சியின் இடதுசாரி உறுப்பினர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். (அ)

## பயங்கரவாத...

விடயங்களைக் குறிப்பிட்டுள்ளார்.

பெரும்பான்மை வாக்குகளால் ஆட்சி பீடமேறிய இன்றைய அரசாங்கத்தின் மீது மக்கள் கொண்டிருந்த பல எதிர்பார்ப்புகள், இன்றும் எதிர்பார்ப்புகளாகவே உள்ளதாக அவர் கூறினார்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை, பல பிரச்னைகளுக்கு இன்றைய அரசாங்கம் தீர்வுகளைத் தராமல் காலத்தை தாமதித்துச் செல்வது மன வருத்தத்திற்குரியது எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்நிலையில் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் மற்றும் தற்போது கடற்றொழில் சமூகம் எதிர்நோக்கும் பாரிய தொழில் பிரச்னைகள் தொடர்பில் அரசாங்கம் அதிக அக்கறையோடு விரைந்து செயலாற்றவேண்டும் எனவும் மன்னார் ஆயர் கோரிக்கை விடுத்துள்ளார். (அ)

## எரிபொருள்...

தேவையானளவு எரிபொருள் இருப்பில் உள்ளது. எமது கப்பல்கள் மத்திய கிழக்கு ஊடாக அல்ல, வேறு வழிகளில்தான் வருகின்றன. எனவே, விநியோகம் பாதிக்கப்படமாட்டாது. " எனவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (அ)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# ஈரான் மீதான தாக்குதல் 4 வாரங்களுக்கு நீடிக்கும்!



## அமெ. ஜனாதிபதி அறிவிப்பு

நியூயோர்க், மார்ச் 03

ஈரான் மீதான இராணுவ நடவடிக்கை இன்னும் நான்கு வாரங்களுக்கு நீடிக்கலாம் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

ஈரானின் பரப்பளவு மற்றும் தற்போதைய இ ராணுவ நிலைவரத்தை அடிப்படையாகக் கொண்டு இந்த காலக்கெடுவைத் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்தத் தாக்குதல்கள் தற்காலிகமானவை அல்ல என்றும், அமெரிக்காவின் அனைத்து இலக்குகளும் எட்டப்படும் வரை போரின் வேகம் குறையாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுவரை நடைபெற்ற தாக்குதல்களில் ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமெய்னி உட்பட 48 முக்கியத் தலைவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இது தாங்கள் எதிர்பார்த்ததை விடப் மிகப்பெரிய வெற்றி எனவும் ட்ரம்ப் மேலும் குறிப்பிட்டார்.

அதே நேரத்தில், இந்தப் போரில் மூன்று அமெரிக்க வீரர்கள் உயிரிழந்துள்ளதை அவர் அதிகாரபூர்வமாக உறுதிப்படுத்தியுள்ளார். (அ)

# சகல எரிபொருள் நிலையங்களுக்கும் நேற்று முதல் பொலிஸார் பாதுகாப்பு

கொழும்பு, மார்ச் 03

நாட்டிலுள்ள அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் பொலிஸ் பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபரின் பணிப்புரைக்கு அமைய, அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்குத் தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நிலவும் நீண்ட வரிசைகளுக்கு மத்தியில் ஏற்படக்கூடிய சிக்கல்களைத் தீர்க்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. (அ)

# 14 நாட்களுக்கு தேவையான எரிபொருளே கையிருப்பில்!

## சுட்டிக்காட்டுகிறார் தயாசிறி

கொழும்பு, மார்ச் 03

ஈரான் போர் சூழ்நிலையால் ஏற்பட்டிருக்கும் அவசர நிலைமையை மக்கள் புரிந்து கொண்டு செயற்படாவிட்டால் திடீரென பாரிய எரிபொருள் நெருக்கடி ஏற்படுவதற்கான சாத்தியங்கள் உருவாகியுள்ளதாக முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

ஈரான் - இஸ்ரேல் மோதல் போக்கு விரிவடைந்து வரும் நிலையில் நாட்டில் ஏற்பட்டிருக்கும் எரிபொருள் நெருக்கடி தொடர்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலே இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கை பொற்றோலியக் கூட்டுத்தாபனம் 35 நாட்களுக்கு போதுமான எரிபொருள் இருப்பதாக பெருமையாக அறிவித்தாலும் 2800 மொற்றிக் தொன் ஒரு நாளுக்கான பாவனை என்ற கணிப்பீட்டிலேயே இதை அறிவித்துள்ளது.

ஆனால் ஒரு நாளைக்கு 6000 மொற்றிக் தொன்னுக்கு மேல் எரிபொருள் நிலையங்களில் விநியோகம் நடைபெற்றால் கையிருப்பில் இருக்கும் தொகை 14-20 நாட்களுக்கே போதுமானதாகும்.

இதனால் பாரிய நெருக்கடி ஏற்படலாம். அதை தான் நாங்கள் தொடர்ந்து சொல்லி வந்தோம். ஆனால் அரசாங்கம் சொல்வது என்வென்றால், ஆர்மோஸ் ஜல சந்தியை மூடினால் எரிபொருள் இல்லாமல் போவதென்றால் ஒரு அரசாங்கம் எதற்கு என வாய்வீச்சு பேசினர்.

சிங்கப்பூரில் எண்ணெய் பெரல் ஒன்றின் விலை 18 டொலரால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இது டொலர் 25 வரை அதிகரிக்க கூடும் என சர்வதேச தகவல்கள் தெரிவிக்கின்றன. அதனால் எரிபொருளுக்காக பாரிய அளவில் செலவு செய்ய வேண்டி ஏற்படலாம். ஆர்மோஸ் ஜல சந்தி மூடப் பட்டுள்ளது. ஆர்மோஸ் ஜல சந்தியினூடாகவே ஆசியாவு க்கு அதிகளவான எரிபொருள் விநியோகிக்கும் மார்க்க மாகும் - என்றார். (அ)

# குவைத்தில் இலங்கையர்களுக்கு எந்தவிதமான பாதிப்பும் இல்லை

கொழும்பு, மார்ச் 03

குவைத்தில் உள்ள அமெரிக்க இராணுவ முகாம்களை இலக்கு வைத்து ஈரான் நடத்திய ஏவுகணைத் தாக்குதல்களில், அங்குள்ள இலங்கையர்கள் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என குவைத்திற்கான இலங்கைத் தூதுவர் லக்ஷித ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

குவைத்தில் வசிக்கும் மற்றும் பணிபுரியும் இலங்கையர்கள் தொடர்பில் தூதரகம் தொடர்ச்சியான கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளது. தற்போது வரை எவ்வித உயிரிழப்புகளோ அல்லது காயங்களோ ஏற்படவில்லை என்பதால் பொது மக்கள் தேவையற்ற அச்சமடைய வேண்டாம் என வர் கேட்டுக்கொண்டார்.

தூதரகம் குவைத் பாதுகாப்புப் பிரிவினருடன் நேரடித் தொடர்பில் உள்ளது. நிலைமைகளைக் கருத்திற்கொண்டு இலங்கையர்களுக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்கத் தயார் நிலையில் இருப்பதாகத் தூதுவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# மாகாணப் பாடசாலைகளின் கட்டமைப்பை மேம்படுத்த நிதி

## பிரதமர் ஹரிணி அமரசூரிய

கொழும்பு, மார்ச் 03

மாகாணப் பாடசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகள் அனைத்து மாகாணங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளதாக பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

அந்த நிதி பாடசாலை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகச் சரியான முறையில் பயன்படுத்தப்படவேண்டும் என்றும், பாடசாலைகளில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்குத் தேவையான கோரிக்கைகளை முன்வைக்குமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

கடந்த முதலாம் ஆம் திகதி வெள்ளவாய பிரதேசத்தைச் சேர்ந்த நோன்பு நோற்கும் முஸ்லிம் பெண்களுடன் நடைபெற்ற சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதனைத் தொடர்ந்து, ஊவா வெல்லஸ இரு திசைகளின் பிரதான சங்கநாயக்கரும், யுடகனாவ ரஜமகா விகாரையின் விகாராதிபதியுமான அதிவணக்கத்துக்குரிய கல்டெம்வத்தே நந்தரதன நாயக்க தேரரைச் சந்தித்த பிரதமர், புதிய கல்விச் சீர்திருத்த வேலைத்திட்டத்தின் தற்போதைய நிலை குறித்து விளக்கமளித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், தொழிற்கல்விக்குத் தகுந்த அங்கீகாரம் வழங்கும் நோக்கில் 25 மாவட்டங்களையும் உள்ளடக்கிய வகையில் நவீன பாடநெறிகளுடன் கூடிய 50 தொழிற்கல்வி நிலையங்களை மேம்படுத்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

மேலும், 2027ஆம் ஆண்டு முதல் 6ஆம் தரத்திற்கான புதிய கல்விச் சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதோடு, புதிய பாடப்புத்தகங்களை அச்சிடும் பணிகளை கல்வி அமைச்சின் வெளியீட்டுத் திணைக்களத்திடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார். (அ)

# சிறுவர்களின் பாதுகாப்பான எதிர்காலம் உருவாக்கிக் கொடுப்பது எமது பொறுப்பு

## வடக்கு ஆளுநர் வேதநாயகன்

யாழ்ப்பாணம், மார்ச் 03

சிறுவர்களின் பாதுகாப்பான எதிர்காலம் மற்றும் ஒளிமயமான வாழ்வை உருவாக்கிக் கொடுப்பது எம் அனைவரதும் தலையாய பொறுப்பும் கடமையுமாகும் எனவும், இக்கருத்தரங்கின் ஊடாக முன்வைக்கப்படும் ஆக்கபூர்வமான பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு மாகாண நிர்வாகம் தனது முழுமையான முயற்சிகளை மேற்கொள்ளும் எனவும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், "சிறுவர் நலன் மற்றும் பாதுகாப்பு" எனும் தொனிப்பொருளிலான விசேட கருத்தரங்கு - 2026 நேற்று திங்கட்கிழமை யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

திணைக்களத்தின் ஆணையாளர் திருமதி சுஜீவா சிவதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதிகளாக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் மற்றும் இலங்கை நிதி ஆணைக்குழுவின் தவிசாளர் சுமித் அபேசிங்க ஆகியோர் கலந்துகொண்டனர்.

இக்கருத்தரங்கில் விசேட உரையாற்றிய ஆளுநர், வடக்கு மாகாணம் மிக நீண்ட காலமாகப் போரின் தாக்கங்களை எதிர்கொண்டதொரு மாகாணமாகும். எனவே, இங்குள்ள சிறுவர்களின் பாதுகாப்புத் தொடர்பில் நாம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. பல சிறுவர்கள் தமது தாய், தந்தை அல்லது இருவரையும் இழந்த நிலையில் வாழ்கின்றனர். ஏனைய சிறுவர்களை விட இவர்களுக்கான தேவைப்பாடுகளும் பாதுகாப்பு ஏற்பாடுகளும் மிகவும் விசேடமானவை. இன்றும் பல சிறுவர்கள் சிறுவர் இல்லங்களில் வாழ்ந்து வருகின்றனர். இல்லங்களில் இல்லாத போதிலும், சமூகத்தில் பல சிறுவர்களுக்கு எமது உதவிகள் தேவைப்படுகின்றன. வறுமை காரணமாக எந்தவொரு சிறுவனும் தனது கல்வியை இழந்துவிடக் கூடாது என்பதில் நாம் ஒவ்வொருவரும் அதீத அக்கறை கொள்ள வேண்டும்," என வலியுறுத்தினார்.

மேலும், சிறுவர்களை இலக்கு வைத்து சமூகப் பிறழ்வுகள் அதிகரித்து வரும் தற்காலச் சூழலில், அது தொடர்பில் அதிக விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய ஆளுநர், எமது மாகாணச் சிறுவர்களின் தனித்துவமான மற்றும் பொதுவான பிரச்சினைகளைச் சரியான முறையில் இனங்கண்டு, அவற்றை இயலுமானவரை தீர்த்து வைப்பதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் எனவும் அழைப்பு விடுத்தார்.

இந்த விசேட கருத்தரங்கில், சட்டத்துடன் தொடர்புடைய மற்றும் முரண்படும் சிறுவர்கள், சிறுவர்களின் மன ஆரோக்கியம் மற்றும் உளவியல் சமூக ஆதரவு, கல்வி மற்றும் சிறுவர் பாதுகாப்பு, அத்துடன் சிறுவர்கள் மற்றும் இளைஞர்களுக்கான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவு ஆகியவற்றின் பாதுகாப்பான பயன்பாடு ஆகிய நான்கு பிரதான தொனிப்பொருள்களின் கீழ் விசேட தொழில்நுட்ப அமர்வுகள் மற்றும் துறைசார் நிபுணர்களின் குழு விவாதங்கள் இடம்பெற்றன.

முன்னதாக விருந்தினர்களால் சிறுவர்களின் கை வண்ணங்கள் கண்காட்சியும் திறந்து வைக்கப் பட்டது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 03.03.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.